100814



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T I**

## අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
## General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

**கவனிக்க:**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. "நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக கடந்த காலத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்" எனக் கூறியவர்,
   (1) ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ஆவார்.  (2) ஈ. எச். கார் ஆவார்.
   (3) ஜீ. எம். ட்ரெவலியன் ஆவார்.  (4) ரீ. எஸ். எலியட் ஆவார்.

2. இலங்கையின் மிகப் பழைமையான வரலாற்று நூலாகக் கருதப்படுவது,
   (1) மகாவம்சம்  (2) தூபவம்சம்  (3) தீபவம்சம்  (4) போதிவம்சம்

3. இலங்கையின் வரலாற்றை உருவாக்கம் செய்யும்போது கல்வெட்டுகள் மிக முக்கியத்துவம் பெறக் காரணம், அவை
   (1) சுருக்கமானதும் தொடர்ச்சியானதுமான வரலாற்றுத் தகவல்களை வழங்குவதனாலாகும்.
   (2) நம்பகத்தன்மையுடயனவாகவும் நிகழ்வுகளின் சமகாலத்தனவாகவும் இருத்தலினாலாகும்.
   (3) சமூக, பொருளாதாரத் தகவல்கள் அதிகமாக உள்ளதனாலாகும்.
   (4) பௌத்த வழிபாட்டுத்தலங்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கின்றமையினாலாகும்.

4. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய தொல்பொருள் சான்றுகள் கிடைக்கும் இடமாவது,
   (1) மிகிந்தலை  (2) சித்துள்பௌவ  (3) ரிட்டிகல  (4) பாஹியன்கல

5. இளவரசன் விஜயன் உள்ளிட்ட குழுவினர் இந்நாட்டில் கரையிறங்கிய இடமான 'தம்மண்ணா' கரை அமைந்துள்ளதாகக் கருதப்படுவது,
   (1) களனி கங்கை, மஹா ஓயா முகத்திடல்களுக்கு இடையில் ஆகும்.
   (2) மஹா ஓயா, தெதுறு ஓயா முகத்திடல்களுக்கு இடையில் ஆகும்.
   (3) தெதுறு ஓயா, கலா ஓயா முகத்திடல்களுக்கு இடையில் ஆகும்.
   (4) கலா ஓயா, மல்வத்து ஓயா முகத்திடல்களுக்கு இடையில் ஆகும்.

6. இலங்கை தொடர்பான தகவல்களை வழங்கிய வெளிநாட்டு எழுத்தாளர்கள் சிலரின் பெயர்கள் I ஆம் நிரலிலும் அத்தகவல்களை உள்ளடக்கிய நூல்கள் II ஆம் நிரலிலும் காட்டப்பட்டுள்ளன.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) அரிஸ்டோட்டல் | A - நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா |
| (ii) தொலமி | B - டிமுன்டோ |
| (iii) கௌடில்யர் | C - அர்த்த சாஸ்திரம் |
| | D - பூகோள சாஸ்திர அறிமுகம் |

   I ஆவது நிரலுக்கு அமைவாக II ஆவது நிரலை ஒழுங்குபடுத்தினால் சரியான விடை,
   (1) A, B, D என்பனவாகும்.  (2) A, C, D என்பனவாகும்.
   (3) B, C, D என்பனவாகும்.  (4) B, D, C என்பனவாகும்.

7. கடந்த காலத்தில் இலங்கை தொடர்பான தகவல்களை வழங்கிய யாத்திரிகரின் குறிப்புகளில் கூடுதலாக உள்ளடங்கியுள்ளது,
   (1) இலங்கை அயல்நாடுகளுடன் சமயத் தொடர்புகளைப் பேணியது என்பது ஆகும்.
   (2) பல்வேறு திறமைகளைக் கொண்ட கலைஞர்கள் இங்கு இருந்தனர் என்பது ஆகும்.
   (3) இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் வர்த்தகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பது ஆகும்.
   (4) வெளிநாடுகள் இலங்கையுடன் ராஜதந்திரத் தொடர்புகளைப் பேணின என்பது ஆகும்.

8. இலங்கையில் முதன்முதலாக கிராம எல்லைகள் வகுக்கப்பட்டது பின்வருவோருள் எவரின் காலத்திலாகும் ?
   (1) தேவநம்பியதீசன்  (2) வசபன்  (3) வலகம்பா  (4) பண்டுகாபயன்

[பக். 2 ஐப் பார்க்க

9. சத்திரிய அபிஷேகத்தினை இந்நாட்டிற்கு அறிமுகம் செய்த இந்திய மன்னன்,
(1) பிம்பிசாரன் (2) சந்திரகுப்த மௌரியன் (3) அசோகன் (4) சமுத்திரகுப்தன்

10. ஆக்கிரமிப்பாளனான போதிலும் நியாயமானதும் சட்டரீதியானதுமான ஆட்சியை நடத்தியதாக மகாவம்ச ஆசிரியர் குறிப்பிடும் அனுராதபுர மன்னன் யார் ?
(1) இராஜராஜன் (2) எல்லாளன் (3) ஸ்ரீ மார ஸ்ரீ வல்லபன் (4) இராஜேந்திர சோழன்

11. பின்வருவனவற்றுள் நகர்ப்புற நீர்த் தேவைகளுக்கு முன்னுரிமையளித்து கட்டப்பட்டதான **இரண்டு** நீர்த்தேக்கங்களாகக் கருதக்கூடியவை எவை ?
(1) ஹுருலு வாவி, கலா வாவி (2) மின்னேரியாக் குளம், கவுடுலு வாவி
(3) திசாவாவி, நுவர வாவி (4) இரணைமடு குளம், கிரிதலை வாவி

12. ஓர் ஆற்று நீரைக் கால்வாய் மூலம் இன்னுமொரு ஆற்றுக்குக் கொண்டு செல்லும் தொழில்நுட்பத் திறமையைக் காட்டுவதற்குக் கொடுக்கக்கூடிய சிறந்த உதாரணம் பின்வருவனவற்றுள் எது ?
(1) எலஹர கால்வாய் (2) மினிப்பே கால்வாய் (3) ஆகாய கங்கை (4) ஜய கங்கை

13. அனுராதபுர காலத்தில் அரசுரிமை உரித்தாக்கம் அங்கீகரிக்கப்பட்டதொரு முறை **அல்லாதது,**
(1) தந்தையிடமிருந்து மகனுக்கு
(2) சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு
(3) இளைய சகோதரனுக்குப் பின் மூத்த சகோதரனின் மகனுக்கு
(4) அரசனின் மனைவியிடமிருந்து அரசனின் மகளுக்கு

14. A - மாகம அரசின் அரச வம்சத்தின் தோற்றுவிப்பாளன்
B - அனுராதபுரத்தின் முதலாவது தூபியைக் கட்டுவித்தமை
C - கலாவாவியை நிர்மாணித்தமை
D - தென்னிந்தியப் படையொன்றின் உதவியுடன் அனுராதபுரத்தின் அரசாட்சியைப் பெற்றுக்கொண்டமை
மேலே A, B, C, D ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களுடன் தொடர்புடைய அரசர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் கொண்டமைந்த விடையைத் தெரிவுசெய்க.
(1) தேவநம்பியதீசன், மகாநாகன், தாதுசேனன், முதலாம் முகலன்
(2) மகாநாகன், தேவநம்பியதீசன், தாதுசேனன், முதலாம் முகலன்
(3) தேவநம்பியதீசன், வசபன், மகாசேனன், மகாநாகன்
(4) மகாநாகன், முதலாம் முகலன், தேவநம்பியதீசன், மகாசேனன்

15. சோழர்களைத் தோற்கடிப்பதற்காக முதலாம் விஜயபாகுவின் படைகள் பயணத்தை ஆரம்பித்த இடம் எது ?
(1) மஹாநாகஹுல (2) மஹாகாம (3) காஜரகாம (4) கொடவாய

16. அனுராதபுர காலத்தில் 'பிட்டதடஹசு', 'மதெஹசு', 'அகலஹசு' ஆகிய பெயர்களால் குறிப்பிடப்பட்டது,
(1) அரசனுக்கு உதவியாயிருந்த மூன்று அரச அலுவலர்களை ஆகும்.
(2) விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட மூன்று வகை வரிகளை ஆகும்.
(3) அக்காலப்பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட மூன்று போகங்களை ஆகும்.
(4) அக்காலப்பகுதியில் பாவனையில் இருந்த மூன்று நாணய வகைகளை ஆகும்.

17. பின்வருவோருள் தனது அரசியல் எதிரிகளை விடவும் தான் மக்களிடத்தில் பிரபல்யமடைவதற்கான ஊடகமாகக் கல்வெட்டுகளை அமைத்த ஆட்சியாளன் யார் ?
(1) முதலாம் விஜயபாகு (2) முதலாம் பராக்கிரமபாகு
(3) கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்லன் (4) சாஹஸ்ஸமல்ல

18. பின்வருவனவற்றுள் முதலாம் விஜயபாகு மன்னன் சிறந்த ஆட்சியாளன் எனக் கருதப்படுவதற்குரிய முக்கிய காரணம் என்ன ?
(1) பலம்மிக்க சோழர்களின் ஆட்சியிலிருந்து நாட்டை மீட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை
(2) பொலன்னறுவையைத் தலைநகரமாகத் தெரிவுசெய்து கொண்டு பலம்மிக்க ஆட்சியைக் கட்டியெழுப்பியமை
(3) இடிபாடுகளாகக் காணப்பட்ட நீர்ப்பாசனத்துறையை புனர்நிர்மாணம் செய்தமையும் விவசாயத்துறையை முன்னேற்றியமையும்
(4) அழிந்துபோன விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்தமையும் உபசம்பத என்னும் பௌத்த உயர் அந்தஸ்தினை மீள் உருவாக்கம் செய்தமையும்

19. A - ஜாதகக் கதைப் புத்தகத்தை சிங்களத்துக்கு மொழிபெயர்த்தல்
B - மூன்றாம் விஜயபாகு மன்னன் தம்பதெனியாவின் மன்னனாதல்
C - யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புமல் குமாரன் நியமிக்கப்படுதல்
D - கடலாதெனிய விகாரை கட்டப்படுதல்
மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்கள் அவை நிகழ்ந்த கால ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C, D (2) B, A, D, C (3) C, A, B, D (4) D, A, B, C

20. முக்கியமாக நீர் அகழி (ஜலதுர்க) ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட ஆட்சி ஸ்தானம் ஆவது
(1) கோட்டே (2) குருநாகலை (3) தம்பதெனிய (4) யாப்பகூவ

[பக். 3 ஐப் பார்க்க

21. பின்வருவனவற்றுள் கண்டி இராச்சியத்துக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான தொடர்பு பற்றிய சரியான கூற்றுகள் இரண்டினைக் கொண்ட விடை எது ?

A - போர்த்துக்கேயர்கள் கண்டிய மன்னர்களுடன் ஒல்லாந்தரைவிட நட்புறவினைக் கடைப்பிடித்தனர்.
B - கண்டிப் பிரதேசங்களில் ஆட்சியதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதில் போர்த்துக்கேயர்கள் தோல்வியுற்றனர்.
C - கண்டியுடனான போர்த்துக்கேயரின் தொடர்புகள் ஓர் ஆக்கிரமிப்புத்திறமையாகும்.
D - கண்டியை ஆக்கிரமித்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் போர்த்துக்கேயர்கள் வெற்றி பெற்றனர்.
E - போர்த்துக்கேயர்கள் கண்டிப் பிரசேதசங்களின் வர்த்தக ஏகபோகத்தினைக் கைப்பற்றினர்.

(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) C யும் D யும் (4) D யும் E யும்

22. மேற்தரப்பட்ட விடயங்களுள் ஒல்லாந்தர் ஆட்சியின் காரணமாக இலங்கையில் ஏற்பட்ட இரண்டு விளைவுகள்

A - நவீன அச்சுக் கலை ஆரம்பமாகியமை
B - விகாரைகளை அண்டிய பாடசாலை முறை உருவானமை
C - ரோமன் கத்தோலிக்க சமயம் பரம்பியமை
D - கறுவாச் செய்கை ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் ஆரம்பிக்கப்பட்டமை

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

23. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனை ஆட்சியிலிருந்து கவிழ்க்க நுட்பமான பின்புலமொன்றினை உருவாக்கியவர்களிற் பிரதானமானவர்,

(1) தேசாதிபதி பிரட்ரிக் நோர்த்
(2) தேசாதிபதி ரொபர்ட் பிரவுன்ட்றிக்
(3) எகலேபொல
(4) கண்டிய வதிவிடப் பிரதிநிதியான ஜோன் டொயிலி

24. இலங்கையின் தோட்டப் பயிர்ச்செய்கையின் முன்னேற்றத்தில் அதிகளவான செல்வாக்குச் செலுத்தப்பட்டது பின்வரும் எந்த அரசியல் யாப்பு சீர்திருத்தம் மூலமாகும் ?

(1) கோல்புறூக் (2) மனிங்-டிவொன்ஷயர் (3) டொனமூர் (4) சோல்பரி

25. பின்வருவனவற்றுள் பிரித்தானியர்களுக்கு இலங்கையைக் கைப்பற்றிக் கொள்வதற்குப் பின்புலமாக அமைந்த காரணங்களை உள்ளடக்கிய விடை எது ?

A - இலங்கையில் அமைந்துள்ள திருகோணமலை இயற்கைத் துறைமுகம்
B - இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பெறுமதிமிக்க வர்த்தகப் பொருள்கள்
C - உள்நாட்டு மக்களை கிறிஸ்தவ மதத்துக்கு மதமாற்றம் செய்துகொள்வதற்கான தேவை
D - தோட்டப் பயிர்ச்செய்கைக்காகப் பொருத்தமான காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

26. இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய தேசாதிபதிகளில் ஹென்றி வோட், ஹர்க்கியுலிஸ் ரொபின்சன், வில்லியம் கிரகறி, ஆதர் கோர்டன் போன்றோர் இந்நாட்டுக் கிராமவாசிகளையிட்டு அக்கறை கொண்டிருந்தனர் என்பதனைக் காட்டும் விடயமாவது,

(1) இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் முன்னேற்றத்துக்கு அனுசரணை வழங்கியமை
(2) பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள் என்பவற்றை முன்னேற்றுவதற்கு அக்கறை காட்டியமை
(3) நீரபாசனக் கால்வாய்களைப் புனரமைத்து விவசாய நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தமை
(4) இலங்கையர்களுக்குக் கூடிய ஆட்சி அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமை

27. டொனமூர் யாப்பின்மூலம் இந்நாட்டு மக்கள் பிரதிநிதிகளிடம் பின்வருவனவற்றுள் எது ஒப்படைக்கப்பட்டது ?

(1) கல்விச் செயற்பாடுகள் (2) நிதிச் செயற்பாடுகள்
(3) நிர்வாகச் செயற்பாடுகள் (4) நீதிச் செயற்பாடுகள்

28. வேதகால ஆட்சியமைப்பில் காண **முடியாத** இயல்பு,

(1) ஆட்சியாளன் 'ராஜன்' என அழைக்கப்படல்
(2) மக்கள் கோத்திரங்களாக வகுக்கப்பட்டிருத்தல்
(3) கிராமத் தலைவர்கள் 'கிராமணி' என அழைக்கப்படல்
(4) ஆட்சி அலகுகள் 'புக்தி' என அழைக்கப்படல்

29. மகதநாட்டில் இரண்டாம் முறையாக தலைநகராகத் தெரிவுசெய்யப்பட்ட நகரம் எது ?

(1) பாடலீ புத்திர (2) வாராணஸீ (3) கிரிவ்ரஜ (4) இந்திரபிரஸ்தம்

30. ஹரிசேனவின் அலஹாபாத் பிரசஸ்தியின் மூலம் எந்த குப்த மன்னனைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன ?

(1) ஸ்ரீ குப்தன் (2) சமுத்திர குப்தன் (3) முதலாம் சந்திர குப்தன் (4) ஸ்கந்த குப்தன்

31. A - மகா அலக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்தமை
B - கவிஞர் காளிதாசர் மேகதூதத்தினை எழுதியமை
C - நான்காவது பௌத்த சமய மகாநாடு நடைபெற்றமை
D - புத்தர்சிலை நிர்மாணக் கலையின் ஆரம்பம்

மேலே கூறப்பட்ட தகவல்களுள் கனிஷ்க மன்னனின் ஆட்சிக் காலத்துடன் தொடர்புடைய இரண்டு நிகழ்ச்சிகளைக் கொண்ட விடை எது ?

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

[பக். 4 ஐப் பார்க்க

32. கீழே நிரல் I இல் டில்லி சுல்தான் மன்னர்கள் சிலரின் பெயர்களும் நிரல் II இல் அவர்களுடன் தொடர்புடைய சில கூற்றுகளும் தரப்பட்டுள்ளன.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) குதுப்-உத்தீன்-ஐபெக் | A - டில்லி சுல்தான் இராச்சியத்தில் அதிகூடிய அதிகாரப் பரம்பல் இடம்பெற்றமை |
| (ii) அலா-உத்தீன்-கல்ஜி | B - இந்தியாவுக்கு ஒரு பொது சமயத்தினை அறிமுகப்படுத்த முயற்சி செய்தமை |
| (iii) முகம்மது-பின்-துக்லுக் | C - டில்லி சுல்தான் இராச்சியத்தின் முதலாவது ஆட்சியாளர் |
| (iv) இப்ராஹிம் லோடி | D - டில்லி சுல்தான் இராச்சியத்தின் இறுதி ஆட்சியாளர் |
| | E - செய்யது ராஜ வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளர் |

நிரல் I இற்கமைய நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை எது ?

(1) A, B, C, D (2) B, C, D, E (3) C, B, A, D (4) E, B, D, A

33. பின்வரும் கூற்றுகளுள் மானிய முறை தொடர்பிலான சரியான இரண்டு கூற்றுகளைக் கொண்ட விடை எது ?

A - பிறப்பை அடிப்படையாகக் கொண்டு சமூக அந்தஸ்து தீர்மானிக்கப்படல்
B - உற்பத்தி மிதமிஞ்சியதாயிருத்தல்
C - வம்சத்தலைவரான பிரதேச ஆட்சியாளர்கள் சுதந்திரமாகச் செயற்பட்டமை
D - சாதாரண மக்களுக்கு நில உரிமை இருந்தமை
E - நீதித்துறைச் செயற்பாடுகள் முழுமையாகவே அரசரின் கீழ் இயங்கியமை

(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) D யும் E யும்

34. குறித்தவொரு நகரத்துடன் தொடர்புடைய சில தகவல்கள் பின்வரும் கூற்றுகள் மூலம் தரப்பட்டுள்ளன.

A - ஐரோப்பாவின் மத்திய காலப் பகுதியில் கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தகர்கள் சந்திக்கும் மத்திய நிலையமாகக் காணப்பட்டமை
B - கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகராக இருந்தமை
C - மொழி-கலை தொடர்பான முக்கியமான கேந்திர நிலையமாக இருந்தமை

இந்நகரம் பின்வருவனவற்றுள் எது ?

(1) அலெக்சாந்திரியா (2) மார்செல்ஸ் (3) கொன்ஸ்தாந்திநோபிள் (4) பாரிஸ்

35. ஐரோப்பிய மறுமலர்ச்சி யுகத்தில் முன்னேற்றமடைந்த பல்வேறு துறைகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்கள் நிரல் I இலும் அவர்கள் பிரபல்யமடைந்த துறைகள் நிரல் II இலும் காட்டப்பட்டுள்ளன.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| (i) கொலம்பஸ் | A - வைத்தியத்துறை |
| (ii) மைக்கல் அஞ்சலோ | B - சித்திரக் கலை |
| (iii) வில்லியம் ஹாவே | C - நாடுகாண் பயணம் |
| | D - வானசாஸ்திரம் |
| | E - அச்சுக் கலை |

நிரல் I இற்கமைய நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும்போது சரியான விடை எது ?

(1) A, B, C (2) B, C, D (3) C, B, A (4) D, E, A

36. 15 ஆம் நூற்றாண்டிலிருந்தே நாடுகாண் பயணங்களிலும் காலனித்துவ இராச்சியங்களை நிறுவுவதிலும் ஸ்பெயின் முன்னிலையில் இருந்தபோதிலும் 17 ஆம் நூற்றாண்டில் அவர்களின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம்,

(1) அவர்களது நாடுகாண் பயணச் செயற்பாடுகளுக்கு அரச அனுசரணை கிடைக்காது போனமையாகும்.
(2) ஐரோப்பாவின் ஆட்சிச் சமநிலை ஒல்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு நன்மையளிப்பதாக மாற்றம் அடைந்தமை ஆகும்.
(3) காலனித்துவ ஆட்சியை நிறுவும்போது அவர்கள் பின்பற்றிய கொடூரமானதும் பயங்கரமானதுமான கொள்கையாகும்
(4) பாப்பாண்டவரின் கட்டளைக்கு அமைய அமெரிக்க கண்டத்திற்கு மட்டும் அவர்களின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டமை ஆகும்.

37. மறுமலர்ச்சியின் விசேட இயல்பு,

(1) தனிநபரை விடச் சமூகமாக ஒன்றுபடுதல் முக்கியமாக அமைந்தமை
(2) கலையும் இலக்கியமும் உலகியற் சார்பு கொண்டமை
(3) கிரேக்க, இலத்தீன் மொழிகளை விடக் கோத்திரங்களைச் சார்ந்த மொழிகள் பிரபல்யமடைந்தமை
(4) கலையும் இலக்கியமும் சமயச் சார்பு பெற்றமை

38. கி.பி. 1811 இல் ஜோன் மக்கடமினால் அறிமுகப்படுத்தப்பட்ட 'மக்கடம் முறை' பயன்படுத்தப்பட்டது,

(1) பெருந்தெருக்களின் நிர்மாணிப்பில் ஆகும்.
(2) இரும்புத்தாதினை உருக்கி இரும்பு உற்பத்தி செய்வதில் ஆகும்.
(3) புகையிரதப் பாதைகளின் நிர்மாணிப்பில் ஆகும்.
(4) இரும்பிலுள்ள கழிவுப்பொருள்களை நீக்கி உருக்கு உற்பத்தி செய்வதிலாகும்.

39. சாமுராய்களின் நிலைமை வீழ்ச்சியடைந்தும் டைமியோக்களின் நிலைமை உயர்வடைந்தும் யப்பானில் சமூக மாற்றம் ஏற்பட்டது யாருடைய ஆட்சிக் காலத்திலாகும் ?

(1) தொகுகாவா-ஷோகன் (2) மெய்ஜி (3) பேரரசன் முட்சுஹிதோ (4) பேரரசன் ஹிரோஹிதோ

40. கி.பி. 1959 இல் சீனாவின் விவசாயத்துறையில் துரித வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக மாஓ-சே-துங்கினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்

(1) நீண்ட நடைப் பயணம் (2) கூட்டுறவு விவசாய நிலையங்களை அமைத்தல்
(3) பாரிய முன் பாய்ச்சல் (4) சிவப்புப் பாதுகாப்புப் படையணியை அமைத்தல்

* * *

OL/2014/33-T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

ඉතිහාසය II
**வரலாறு II**
History II

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

100830

* பகுதி **I** இன் **முதலாம்** வினா கட்டாயமானது.
* பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து **இரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1. (அ)** கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றிடங்களைத் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) கலா வாவி, புலஸ்தி நகரம், ஜஜ்ஜர நதி, காசரகாம, கோகர்ணம், காலதித்த, செங்கடகல, சிலாபம், ஆனையிறவு, உபதிஸ்ஸகம (10 புள்ளிகள்)

(ii) கங்கை நதி, சுப்பாரக, ஜாவா தீவு, கருங்கடல், ஜப்பான், அரேபியா, மலாய தீபகற்பம், செங்கடல் (08 புள்ளிகள்)


**(ஆ)** (i) மேலே *A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத்தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை/நாடுகளை ஒழுங்குமுறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

*A* - மௌரியப் பேரரசின் ஆரம்பகால அரசன்
*B* - ‘மொனாலிசா’ ஓவியத்தினை வரைந்த ஓவியர்
*C* - கொன்பியூசியஸ் நெறி பரவிய நாடு
*D* - ‘அங்கோர்வாத்’ விகாரை அமைந்திருக்கும் நாடு (04 புள்ளிகள்)

* *A, B* ஆகிய படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை **இலக்கங்களின் ஒழுங்கில்** உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. *A* எனக் காட்டப்பட்டுள்ள கட்டடம் யாது ?
2. இது இலங்கையின் எப்பிரதேசத்தில் அமைந்துள்ளது ?
3. அது எந்த சமயத்துக்குரியது ?
4. இதனை நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் அனுசரணை வழங்கிய அரச வம்சத்தை எவ்வாறு அழைப்பர் ?


04 புள்ளிகள்)



*A*

(iii) 1. *B* எனக் காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன ?
2. இது எந்த நாட்டில் அமைந்துள்ளது ?
3. இதனை நிர்மாணித்த அரசன் யார் ?
4. அது எதற்காக அமைக்கப்பட்டது ?

(04 புள்ளிகள்)



*B*

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**2.** (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளுள்

$A$ - **இரண்டு** புலம்பெயர்தல்களையும்

$B$ - படையெடுப்பு **ஒன்றையும்**

தெரிவுசெய்து எழுதுக.

- தபஸ்ஸு, பல்லுகன் ஆகிய இரு வணிக சகோதரர்களின் வருகை
- இளவரசி ஹேமமாலாவும் இளவரசன் தந்தவும் தந்ததாதுவைக் கொணர்ந்தமை
- இளவரசன் விஜயனதும் பரிவாரத்தினதும் வருகை
- சேனன், குத்திகன் ஆகியோரின் வருகை
- மாகனும் அவனுடைய குழுவினரதும் வருகை
- இளவரசி பத்தகச்சானாவின் சகோதர்களின் வருகை (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் ஆரியக் குடியிருப்புகள் இலங்கையின் எந்த நதிப் பள்ளத்தாக்குகளை அண்டி அமைந்தன என்பதனை $A, B, C, D$ ஒழுங்குமுறையில் காட்டுக.


$A$ - அனுராதகாமம் $B$ - தீககாமம்

$C$ - உருவேலகாமம் $D$ - மகாகாமம் (04 புள்ளிகள்)

(iii) அனுராதபுர காலத்தின் முதற் பகுதியில் நீர்ப்பாசன வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவான காரணங்கள் **இரண்டினை** விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தின் முக்கியத்துவத்தினை **மூன்று** விடயங்களைத் தொடர்புபடுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) இங்கு தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் $A, B, C$ ஆகியவற்றினாற் சுட்டப்பட்டுள்ள **மூன்று** துறைமுகங்களை ஒழுங்குமுறையிற் பெயரிடுக. (03 புள்ளிகள்)




(ii) கடந்தகாலங்களில் வெளிநாட்டவர்களுடன் அரசியல், வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துவதிற் செல்வாக்குச் செலுத்திய இலங்கையின் அமைவிட முக்கியத்துவங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) (*a*) கடந்தகாலங்களில் இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொல்பொருள் மூலாதாரம் ஒன்றினைப் பெயரிடுக.

(*b*) அக்காலத்தில் இலங்கையிற் காணப்பட்ட உள்நாட்டு வர்த்தகம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **இரண்டு** காரணிகளின் துணையுடன் விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) வெளிநாட்டு செல்வாக்கு காரணமாக பொலன்னறுவைக் காலத்தில் இலங்கையின் சமய, கலைத் துறைகளில் ஏற்பட்ட ஒவ்வொரு மாற்றத்தையும் உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

**4.** (i) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இங்கு இருந்த இராச்சியங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) இங்கு *A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத்தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை/இடங்களை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - கீழைத்தேய போர்த்துக்கேய ஆதிபத்தியத்தின் தலைமையகம்

*B* - கீழைத்தேய ஒல்லாந்தர் ஆதிக்கத்தின் தலைமையகம்

*C* - முல்லேரியாப் போரில் போர்த்துக்கேயரை படுதோல்வியடையச் செய்த சிங்கள இளவரசன்

*D* - முதலாம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலத்தில் மலைநாட்டிற்கு வந்த முதலாவது ஒல்லாந்த இனத்தவர்

(ஜோரிஸ் பன் ஸ்பில் பேர்கன், சீ போல்ட் டி வார்ட், லிஸ்பன், கோவா, அம்ஸ்டர்டாம், பத்தேவியா, மஹா அஸ்தான இளவரசன், டிக்கிரி இளவரசன்) (04 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தர்கள் இலங்கையிலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொண்ட விதத்தினை **இரண்டு** விடயங்களின் துணையுடன் விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் மலைநாட்டை ஏன் கைப்பற்ற முடியாது போயிற்று என்பதனை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**5.** (i) பின்வரும் ஒவ்வொரு வரலாற்று நிகழ்ச்சியுடனும் தொடர்புடையவர் யார் ?

*A* - குசுமாசன தேவியைத் திருமணம் செய்ததன் மூலம் கண்டி இராச்சியத்தின் அரச உரிமையைப் பெற்றுக்கொண்டமை

*B* - கி.பி. 1638 இல் ஒல்லாந்தர்களுடன் ஓர் ஒப்பந்தம் எழுதியமை

*C* - ஒல்லாந்தர்களின் உதவியுடன் சீயம் நாட்டிலிருந்து இலங்கைக்கு உபசம்பதா சடங்கினைக் கொண்டுவந்தமை (03 புள்ளிகள்)

(ii) கரையோரப் பிரதேசங்களில் தமது அதிகாரத்தை நிறுவிய பிரித்தானியர்களுக்கு கண்டி இராச்சியத்தினைக் கைப்பற்றிக்கொள்ளும் தேவை ஏற்பட்டமையிற் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கி.பி. 1815 இல் தேசாதிபதி ரொபர்ட் பிரவுன்ரிக் இலகுவாகக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ள முடிந்தமையினை இரண்டு காரணிகளின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கி.பி. 1818 ஆம் ஆண்டில் பிரித்தானியாவுக்கு எதிரான சுதந்திரப் போராட்டமொன்றை கண்டிப் பிரதேசங்களில் நடத்துவதற்கு ஏதுவாயிருந்த **மூன்று** காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) பின்வரும் ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடையவர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

*A* - கி.பி. 1891 ஆம் ஆண்டில் இந்திய மஹாபோதி சங்கம் நிறுவப்பட்டமை

*B* - யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணையில் ஆங்கிலப் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டமை

*C* - மருதானை சாஹிரா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டு முஸ்லிம் பிள்ளைகளின் கல்விக்குப் பெரும் பங்காற்றியமை (03 புள்ளிகள்)

(ii) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் சிபாரிசுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) *A* - எமது நாட்டிற்குச் சர்வஜனவாக்குரிமையை வழங்கிய யாப்பினைப் பெயரிடுக.

*B* - தற்போது தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகின்ற **மூன்று** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் பௌத்த கல்வியை மேம்படுத்துவதற்காக ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் ஆற்றிய பணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

இங்கே வெட்டி அகற்றவும்

[பக். 4 ஐப் பார்க்க

## பகுதி III

**7.** (i) வடமேற்கு இந்தியாவில் அமைந்துள்ள கணவாய்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) $A, B, C, D$ எனத் தரப்பட்டுள்ள தகவல்களுடன் பொருந்தும் விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

$A$ - இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த ஆரியர்களின் பூர்வீகம் எனக் கருதப்படும் பிரதேசம்

$B$ - இருக்கு வேத ஆரியர்கள் ஆரம்பத்தில் இந்தியாவில் குடியேறிய பிரதேசம்

$C$ - வேத காலத்தில், புனிதத்துவத்திற்குப் பாத்திரமான பிராணி

$D$ - இந்தியாவின் தென்பகுதி நோக்கி புலம்பெயரத் தொடங்கிய ஆரியர்களுக்குக் கடந்துசெல்ல வேண்டியிருந்த மலைத்தொடர்

(இந்துகுஷ், ஸ்ரெப்ஸ் புல்வெளி, விந்தியமலை, ஈரான், சப்தசிந்து, கங்கைநதிப் பள்ளத்தாக்கு, குதிரை, பசு) (04 புள்ளிகள்)

(iii) வேத காலத்து

(a) சமூக அமைப்புகள்

(b) பொருளாதாரம்

என்பன தொடர்பான விபரங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் வட இந்தியாவிற் காணப்பட்ட அரசியல் அமைப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தை **மூன்று** விடயங்களின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

**8.** (i) வர்த்தகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்தியாவில் வர்த்தக நிலையங்களை உருவாக்கிய **மூன்று** ஐரோப்பிய இனத்தவரைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) $A, B, C, D$ எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவர்களை / இடங்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

$A$ - இந்தியாவின் இறுதிப் பிரித்தானிய அரசப் பிரதிநிதி

$B$ - "பிரித்தானியர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதற்கு ஆயுத பலத்தைப் பயன்படுத்த வேண்டும்" என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்

$C$ - இந்திய தேசிய இயக்கத்தின் தந்தை எனக் கருதப்படுபவர்

$D$ - இந்திய தேசிய காங்கிரசுக்கும் முஸ்லிம் லீக்கிற்கும் இடையே ஓர் உடன்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதற்காக மகாநாடு ஒன்று நடைபெற்ற இடம்

(கர்சன் பிரபு, சுபாஷ் சந்திரபோஸ், ஜவஹர்லால் நேரு, பால் கங்காதர திலக், சுரேந்திரநாத் பனர்ஜி, மவுண்ட் பட்டன் பிரபு, கல்கத்தா, சிம்லா) (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இந்தியர்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) பிரித்தானியர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்றுவதற்கு மகாத்மா காந்தி கடைப்பிடித்த **மூன்று** செயற்பாடுகளை உதாரணங்கள் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

**9.** (i) இங்கிலாந்தைத் தவிர கைத்தொழில் புரட்சி பரவலடைந்த வேறு ஐரோப்பிய நாடுகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) இங்கிலாந்து தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழில் புரட்சிக்காக மேற்கொண்ட முயற்சிகள் ஆரம்ப காலத்தில் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற் புரட்சி காரணமாக உலகில் போக்குவரத்து நடவடிக்கைகள் விரைவாக அபிவிருத்தியடைந்த விதத்தினைக் கடல்வழிப் போக்குவரத்து, தரைவழிப் போக்குவரத்து என்பவற்றினூடாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழிலாக்கத்தின் பாதகமான விளைவுகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விவரிக்க. (06 புள்ளிகள்)

**10.** (i) $A$ - முதலாம் உலகப் போரின் பின்னர் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பையும்

$B$ - அமெரிக்க ஐக்கிய அரசு இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டமைக்கான காரணத்தையும்

$C$ - இரண்டாம் உலகப் போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு உதவியளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தினையும்

ஒழுங்குமுறையில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) சோவியத் ரஷ்யா வீழச்சியடைந்ததன் பின்னர் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**


ඉතිහාසය II
வரலாறு II
History II

1. (අ) (i)
1. (அ) (i)
1. (a) (i)

විභාග අංකය / சுட்டெண் / Index No. ............................



1. (අ) (ii)
1. (அ) (ii)
1. (a) (ii)




The National e-learning Portal for The General Education

[අනෙක් පිටුව බලන්න / மறுபக்கம் பார்க்க / *See next page*